கொள்ள எனக்கு உரிமை உண்டு. மைசூர் மாநில மக்களுக்கு இந்த அரசின் நல்லெண்ணத்தைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

உறுதி செய்யப்பட்டிருப்பவை limit flows நமக்கு உறுதியாக்கப்பட வேண்டும். அதை மீறுகிற காரியங்கள் நடை பெறவிடக்கூடாது என்பதுதான் நம்முடைய வாதமாகும். உறுதி செய்யப்பட்டிருப்பவைகளுக்குக் குந்தகம் இல்லாமல் அணை கட்டு வதற்குத் தடை இல்லை. நாங்கள் மீண்டும் பேசத் தயாராக இருக் கிறோம். பேச்சுவார்த்தை ஒப்பந்தத்தை மதிப்பதாக இல்லையென்ற காரணத்தால்தான் மத்திய அரசிடம் நாம் வேண்டுகோள் செய் திருக்கிறோம். மத்திய அரசு இதில் தலையிட்டு, அந்த ஒப்பந்தம் மதிக்கப்பட வேண்டும் என்று சொல்லிருக்கிறோம். அந்த ஒப்பந் தத்தை மைசூர் மாநில அரசு மதிப்பதற்கில்லையென்று தெரியவந்த தால், மத்திய அரசு தலையிட்டு, அணை கட்டுவதை நிறுத்தி வைக்க வேண்டுமென்று அந்த அரசுக்கு எழுதியிருப்பதாகத் தெரிய வருகிறது. ஹேமாவதி அணையைக் கட்டியே தீருவோம் என்று அவர்கள் சொன்னால், அதற்குண்டான நடவடிக்கையை எடுக்க வேண்டிய அதிகாரம் நம்முடைய கையில் இல்லை. ஆகவே, மத்திய அரசை, அணுக வேண்டிய முறையிலே இந்த அரசு அணுகும் என்பதைக் கூறிக்கொள்கிறேன். நமது எதிர்கட்சித் தலைவர் அவர்கள் கூறியதுபோல், இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து இது குறித்துப் பேசுவதால் விவாதங்கள் வேறு திசைக்குப் போய்விடுமோ என்ற அவருடைய அச்சத்தை நான் ஆதரித்து, இந்தப் பிரச்சினை நல்ல முறையில் தீர்க்கப்பட வேண்டுமென்பதில் அரசுக்கு அதிக அக்கறை இருக்கிறது என்பதை மைசூர் மாநில அரசுக்கும், மக்களுக்கும் தெளிவாக்கியிருக்கிறோம். ஆகவே, இந்தப் பிரச்சினையை விவாதிக்க இந்தப் பேரவையை ஒத்திவைக்கத் தேவையில்லை என்று கூறி முடிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்குப் பிறகு, இந்தப் பிரச்சினையைப் பற்றி விவாதிப்பதற்காக இப்பேரவையின் பிற அலுவல்களை ஒத்தி வைக்கத் தேவையில்லையென்று கருதுகிறேன். ஆகவே. இதற்கு நான் அனுமதி தர மறுக்கிறேன்.

(4) கவனஈர்ப்பு

குமரி மாவட்டம், கல்குளம், விளவங்கோடு தாலுக்காக்களில் அரிசித் தட்டுப்பாடும் விலை எற்றத்தைத் தடுப்பதன் அவசியமும்

திரு. எம். சி. பாலன் : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின்கீழ் அவசரப் பொதுமுக்கியமான ஒருநிகழ்வு குறித்து மாண்புமிகு உணவு, வணிகவரித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

"உணவுக் கட்டுப்பாட்டை தளர்த்திய பிறகும், குமரி மாவட்டத் தில் கல்குளம் தாலுக்காவிற்கும் விளவங்கோடு தாலுக்காவிற்கும் இடையில் 10-க்கும் மேல் சோதனை நிலயங்கள் இருப்பதால், விளவங்

கோடு தாலுக்காவிலுள்ள மக்களுக்கு அரிசி கிடைக்க வாய்ப்பில்லாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. அவர்களுக்கு ரேஷனும் கொடுப்பதை நிறுத்திவிட்டு, வெளிச் சந்தையில் கிடைக்க வாய்ப்பற்ற முறையில் சோதனைச்சாலைகளும் இருப்பதால் பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலைபற்றி".

THIRU R. PONNAPPA NADAR: Sir, I wish to call the attention of the Hon'ble Minister for Food and Commercial Taxes to a matter of urgent public importance, namely, the scarcity of rice in the border taluk of Vilavancode and Kalkulam in the Kanyakumari district even after the policy of de-control and the need to take steps to arrest the soaring prices.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, இந்த மாநிலத்தில் உணவுப் போக்குவரத்துத் தடையை சென்ற திங்களில் (8—1—1970) அரசு நீக்கியது. கன்யாகுமரி மாவட்டத்தின் சில பகுதிகள், கேரள மாநில எல்லையில் இருப்பதால், அவ் வெல்லைப் பகுதிகளில் மட்டும் உணவுப் போக்குவரத்துத் தடை நீடித்து வருகிறது. மேலும் மாநில எல்லையில் 15 மைல் சார்புப் பகுதிகளை 1964-ம் ஆண்டு தென் மாநிலங்கள் (அரிசி ஏற்றுமதி ஒழுங்குமுறை) ஆணையின்கீழ் 'அறிவிக்கப்பட்ட சார்புப் பகுதி' யாக Notified as belt area *உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. விளவங்கோடு தாலுக்காவும், கல்குளம் தாலுக்காவின் சில பகுதிகளும் மாநில எல்லையிலிருந்து 15 மைல்களுக்குள் உட்பட்டு இருப்பதால், இந்த இடங்களில் உணவுப்போக்குவரத்துத் தடை தொடர்ந்து நீடிக்கப் பட்டுள்ளது. மாநில எல்லையோரங்களின் வழியாக நெல், அரிசி கள்ளக் கடத்தல் நடைபெறாமல் தடுக்கும் பொருட்டு இப் பகுதிகளில் உணவுப் பொருள் போக்குவரத்துத் தடை தொடர்ந்து செயல் பட்டு வருகிறது.*

பொது மக்களுக்கு ஏற்படும் வசதிக் குறைவைத் தடுக்கவும், அதே சமயத்தில் மாநில எல்லை வழியாக அரிசி கடத்தப்படுவதைத் தடுக்கவும், கல்குளம்-விளவங்கோடு எல்லையில் சோதனைச் சாவடிகள் தொடர்ந்து இயங்கி வருகின்றன. உரிமம் வைத்துள்ள சில்லரை வியாபாரிகள் வரையறுக்கப்பட்ட பகுதிகளுக்கு வெளியே அரிசி வாங்கவும், அவைகளை விளவங்கோடு தாலுக்காவுக்குள் அனுமதிச் சீட்டு முறையில் கொண்டு வரவும் அனுமதிக்கப்படுகிறார்கள். உரிமம் வைத்திருப்பவர்களின் இயல்பான கையிருப்பை முன்னிட்டு தாராளமாக அனுமதிச் சீட்டு வழங்கப்பட்டு வருகின்றது. இம் மாற்றத்தினால் ஆரம்பகாலத்தில் சில இடையூறுகள் காணப்படலாம். ஆனால் போதுமான அளவில் சில்லரை வியாபாரிகள் இவ்விடங்களில் இயங்கும் நிலைமை ஏற்பட்டு நிலை சுமுகமாகும் என எதிர்பார்க்கலாம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: *தலைவர் அவர்களே, உரிமம் வழங்குவதிலே பல கஷ்டங்கள் இருக்கின்றன. வியாபாரிகளுக்குச் சரியாக உரிமம் வழங்காததன் காரணத்தால், இடைஞ்சல்கள் இருக்கின்றன. ஆகவே, வியாபாரிகளுக்குத் தாராளமாக உரிமம் வழங்குவதற்கான ஆணை பிறப்பிக்கப்படுமா?*

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, உரிமம் வழங்குவதிலே எந்தவிதமான ஆட்சேபமும் இல்லை. உரிமம் அவர்களுக்குத் தாராளமாக வழங்கப்படும்.

திரு. எம். சி. பாலன்: தலைவர் அவர்களே, 15 மைல் எல்லையோரப் பகுதி என்றிருப்பதை 5 மைல் என்ற அளவில் குறைத்துக் கொள்வதைப்பற்றி அரசு பரிசீலனை செய்யுமா? எல்லைப் பகுதிகளில் இன்னும் நிறைய சோதனை நிலையங்கள் நிறுவப்பட்டால், கள்ளக்கடத்தலைத் தடுப்பதற்கு வசதியாக இருக்கும் என்பதை அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, 5 மைல் எல்லையோரப் பகுதி என்று குறைக்கும் யோசனை இல்லை. ஆனால் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்ட மற்றொரு யோசனையை அரசு பரிசீலனை செய்யும்.

(5) 1970 71-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீது பொதுவிவாதம்—(தொடர்ச்சி.)

*திரு. டி. மார்டின்: பேரவைத் தலைவர் அவர்களே, 1970-71-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது கடந்த சில நாட்களாக நடந்து வருகிற பொதுவிவாதத்தில் கலந்து கொண்டு நானும் எனது கருத்துக்கள் சிலவற்றை இந்த அவைமுன் வைக்க விரும்புகிறேன்.

எந்கனவே இருக்கிற வரிகளை உயர்த்தியிருப்பதன் மூலம் 6 கோடிக்கு மேல் வருமானம் என்று ஆட்சியினர் கருதியபோதிலும் 16 கோடிக்குமேல் வரும் என்கிற கருத்து மக்கள் மத்தியில் இருக்கிறது.

குறிப்பாக நிதி அமைச்சர் அவர்கள் சில தினங்களுக்கு முன்னால் 1966-67-இல் செலவினங்களுக்கு ஒதுக்கியதைக் காட்டிலும் இந்த ஆண்டு அதிகமாக ஒதுக்கியிருக்கிறோம் என்றார்கள். நான் எங்கே ஒதுக்கியிருக்கிறார்கள் என்று பார்த்தேன்.

1966-67-இல் அமைச்சர்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகை ஐந்து லட்சத்து பதினாராயிரம் சொச்சம் தான். ஆனால் இந்த 1970-71-க்கு பத்து லட்சத்து ஐம்பத்தாறாயிரம் சொச்சம் ஒதுக்கியிருக்கிறார்கள். அமைச்சர்கள் செலவு காங்கிரஸ் ஆட்சியில் 5 லட்சமாக இருந்தது என்றால் இப்போது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் பத்து லட்சமாகக் கூடியிருப்பதை நான் பார்க்கிறேன்.

அதோடு மட்டும் அல்ல, 1967-68-இல் கார் வாங்க 3 லட்சம் ஒதுக்கினார்கள். அடுத்து, 1968-69-இல் இரண்டு லட்சத்து ஐம்பத்தொன்பதாயிரம், 1969-70-இல் இரண்டு லட்சத்து முப்பத்தைந்தாயிரம் ஆக மூன்றாண்டுகளில் ஏழு லட்சத்து 95 ஆயிரம் கார்